# கலைஞரை ஏற்பது காலத்தின் தேவை!



■ நீரை.மகேந்திரன்

இந்திய அரசியல் வரலாற்றில் ஜனநாயகத்தின் விரிவான பொருளை உணர்ந்து அரசியல் பாதையை வரித்துக் கொண்ட தலைவர்கள், முதலமைச்சர்களில் முத்தமிழறிஞர் கலைஞர் எவரை விடவும் மிகப்பெரிய இடைவெளியுடன் முதல் நிலையில் இருப்பார்.

பூகோள ரீதியாக, தென்னகத்தின் அரசியல் பண்பும், சமூகவியல் ரீதியாக தமிழ்நாட்டின் அரசியல் எழுச்சியும் கலைஞரின் பண்பட்ட அரசியல் ஆளுமைக்கு மிக வலுவான அடித்தளத்தைக் கொடுத்திருக்கின்றன. அதன் மீது ஏறி அரசியல் செய்தவர்களில் கலைஞரை, எல்லா இலக்குகளையும் சாதித்தவராகப் பார்க்கலாம்.

### இலக்குகளை எட்டியவர்!

கடந்த நூறு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் வளர்ச்சி வரலாற்றில் அரசியல் பண்பாட்டில் திராவிட இயக்கத்தின் பங்கு தவிர்க்க முடியாதது.

மனிதர்கள் மற்ற மனிதர்கள் மேல் செலுத்தி வந்த ஆதிக்கத்தை, எதிர்த்து நின்று கேள்வி கேட்டு, அனைவரும் சமம் என்கிற சமூக நீதிப் பண்பாட்டைத் தமிழ்நாட்டில் உரக்கப் பேசியது திராவிட இயக்கம். திராவிட இயக்கத்தின் முகமாக தந்தை பெரியார் உயர்ந்து நிற்கிறார் என்றால், அவரின் இலக்குகளை அடைந்தவற்றில் கலைஞர் இன்றி எதுவும் சாத்தியமாகி இருக்காது.

மூடப் பழக்கவழக்கங்கள், பண்பாட்டு அடிமைத்தனங்கள், சாதிப் பாகுபாட்டு ஒடுக்கு முறைகள், பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என எல்லா கீழ்மைகளுக்கு எதிராகவும் பெரியார் சமர் புரிந்தார் என்றால், அந்த சமரில் மிக நுட்பமாக வெற்றிகண்டவராக கலைஞர் இருந்தார்.

தமிழ்நாட்டின் சமகால அரசியல் வரலாற்றைப் பண்பட்ட அரசியல் வரலாறாக நாம் எழுதிக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் பெரியாரின் மாணவர்களாக, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வரிசையைப் பார்க்கலாம்.

அறிஞர் அண்ணா அவர்களின் பகுத்தறிவு, சீர்திருத்த அரசியலுக்கான காலமும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பகுத்தறிவு சீர்திருத்த அரசியலுக்கான காலமும் இருவேறுபாற்பட்டவை. திராவிடக் கொள்கையின் அடிநாதமாகப் பகுத்தறிவு, சமூக நீதி, சமூக சீர்திருத்தமாக இருந்தாலும் அவற்றைப் பண்பாட்டுப் புரட்சியாக மட்டுமே நிகழ்த்தி விட முடியாது.

அதற்கு ஆட்சி அதிகார வழியை பேரறிஞர் அண்ணா தேர்வு செய்து செயல்படுத்திக் காட்டினார். பேரறிஞர் அண்ணாவின் அந்தக் கனவை நோக்கிய பயணத்தில், அத்தனை நெருக்கடிகளையும் எதிர்கொண்டு சட்டப் புரட்சியாகவும் நிகழ்த்திக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

### தடைகள் உடைத்தல்

மனிதனை மனிதன் சுமப்பது அநீதியானது எனப் பேசுகிறோம். கைரிக்ஷா ஒழித்து சைக்கிள் ரிக்ஷாவாகக் கொடுத்து அதைப் பண்பாட்டு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் மாற்றிக் காட்டியவர் கலைஞர்.

பெண்கள் கல்வி கற்பதற்கு இருந்த தடையை உடைக்க வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்? பெண் பிள்ளைகள் திருமண வயதுக்கு முன் திருமணம் செய்யப்படுவதைத் தடுக்க வேண்டும் அதற்கு என்ன செய்யலாம்? இரண்டு மலைகளையும் பெயர்த்தெடுக்கும் ஒரே கல்லாக, பெண் பிள்ளைகள் கல்வி கற்றால் திருமணத்தின் போது அவர்களுக்கு உதவித்தொகை என அறிவிக்கிறார். இன்று அந்த தூரத்தை நாம் எந்த அளவு கடந்து இருக்கிறோம் என்பதை மனசாட்சி உள்ளவர்கள், வரலாற்றை நேர்மையாகத் திரும்பிப் பார்ப்பவர்கள் பெருமிதப்படுவர்.

பெண்களுக்கான சொத்துரிமை என்கிற இமாலயப் பணியை நிகழ்த்திக் காட்டியவர் கலைஞர். அண்ணல் அம்பேத்கர் தனது சட்ட வரைவில் கூடப் பெண்களுக்கான சொத்துரிமையை முன் வைக்கிறார். ஆனால், அவரால் அதைச் சட்ட வடிவமாக்க முடியவில்லை. அதற்கு அவ்வளவு முட்டுக்கட்டை எழுகிறது.

குடும்பச் சொத்தில் பங்கு எனப் பெண்களுக்குச் சொத்துப் பிரித்துக் கொடுத்தால் சொத்து கை மாறிவிடும் என்கிற பழமைவாதிகளுக்கு எதிராக அம்பேத்கர் அன்று கையறு நிலையில் இருந்தார். கலைஞர், அதைச் சாதித்துக் காட்டி இந்தியாவுக்கே முன்னோடியாக, அண்ணல் அம்பேத்கரின் நெஞ்சில் இருந்த கனவையும் நிறைவேற்றிக் காட்டினார்.

> **“எனது பொது வாழ்க்கையின் மீது கற்கள் வீசப்படும் போதும் பூக்கள் தூவப்படும் போதும், இரண்டையும் ஒன்றாகக் கருதித்தான் எனது பயணத்தைத் தொடர்கிறேன்!”**

சீர்திருத்தம் என்பது சொற்களால் அல்ல , நடவடிக்கைகளால் நிகழ்த்திக் காட்டுவது, என்கிற பெரியாரின் நெறிகளுக்கு ஏற்ப அதை சட்டப் பூர்வமாக நிகழ்த்திக் காட்டியவர் கலைஞர்.

தாழ்த்தப்பட்ட மக்கள், பஞ்சாயத்துத் தலைவராக முடியாது என்கிற சாதி ஆதிக்க மனப்பான்மைகளுக்கு எதிராக, மக்களின் மனதில் மாற்றங்களை நிகழ்த்தி பஞ்சாயத்துத் தேர்தலில் நடத்திக் காட்டியவர் கலைஞர். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்பதற்கு, எதிராக இருந்த தடைகளுக்கும் சட்டப் போராட்டம் நிகழ்த்தியவர்.

இப்படி அவர் ஆட்சிக் காலத்தில் பகுத்தறிவு சமூகச் சீர்திருத்த நடவடிக்கைகளுக்காகப் பல முனைப்புகளைக் காட்டியவர். ஆட்சி அதிகாரத்தில் இல்லை என்றாலும், அந்தக் கொள்கையில் இருந்து அவர் வழுவியதில்லை.

### சந்தேகமற்ற பாதுகாப்பு

சிறுபான்மையினர் பாதுகாப்பிலும் கலைஞர்தான் முன்னோடி. ஒரு நெருக்கடியான நேரத்தில், சிக்கலான அரசியல் முடிவு எடுக்க வேண்டிய நேரத்திலும் அவர் அந்தக் கொள்கையை மறந்தவரில்லை. “எங்களுடைய நீண்டகால அரசியல் வரலாற்றில், காரணம் எதுவாக இருந்தாலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் , சிறுபான்மையினருக்கும் ஆதரவளித்துப் பாதுகாத்து வந்திருக்கிறோம். அந்தப் பெருமைகளில் யாரும் சந்தேகப்பட முடியாது அது எங்களுடைய உறுதிமொழி. அதை நாங்கள் தொடர்ந்து செய்வோம்” என்றார்.

அரசியல் நெருக்கடிகளின் போது சமநிலை தவறியதில்லை. தனிப்பட்ட முறையில், அவர் மீது அவதூறுகள் வீசப்பட்ட போதும் , அரசியல் ரீதியான நெருக்கடிகளின் போதும் அவற்றைப் பொதுவில் கொண்டு வரும் அவரது ஜனநாயகத் தன்மை அளப்பரியது.

“எனது பொது வாழ்க்கையின் மீது கற்கள் வீசப்படும் போதும் பூக்கள் தூவப்படும் போதும், இரண்டையும் ஒன்றாகக் கருதித்தான் எனது பயணத்தைத் தொடர்கிறேன்” என்று குறிப்பிடுகிறார். ஆட்சி அதிகாரத்தில் இருந்தாலும் இல்லை என்றாலும், அந்த அளவுகோல்களை அவர் மீறியதில்லை.

நூற்றாண்டு நேரத்தில் அவரின் ஒவ்வொரு அசைவுகளையும் பேசுவது எதிர்காலத் தலைமுறையின் இயக்கத்துக்கு அவசியமானதாக இருக்கும். பேசுவோம் பண்பாட்டு அரசியல் மாற்றங்கள் மேலும் மேலும் முன்னோக்கி செல்லும் வரை பேசிக்கொண்டே இருப்போம்.

---

## திராவிட இயக்க இதழ்கள் - ‘சமரசம்’



இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டு இஸ்லாமியர்களின் பங்களிப்பு பெரியது. அவர்கள் திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்கும் உழைத்திருக்கிறார்கள். அப்படி ஒருவர்தான் எஸ்.எம்.சுல்தான் பக்தாதி.

1898-இல் இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூரில் பிறந்தார். இவரது தந்தையார் இலங்கையில் பெரும் வணிகராக இருந்த காரணத்தால், பக்தாதி தமது ஆரம்பக் கல்வியை, இலங்கையிலேயே பூர்த்தி செய்துவிட்டு, மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பட்டப்படிப்பைப் பயின்றார். பிறகு, இவருக்கு ஈராக் நாட்டில் தபால் துறையில் வேலை கிடைத்தது. மூன்று ஆண்டுகள் அங்கு வேலை செய்து திரும்பியதால், இவரின் பெயருக்குப் பின்னால் ‘பக்தாதி’ எனும் சிறப்புப் பெயரும் சேர்ந்துகொண்டது.

விடுமுறையைக் கழிக்க, தாய்நாடு திரும்பியவர், காந்தியடிகளின் சொற்பொழிவைக் கேட்டுத் தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு, விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டார். இவர் 1923-இல் நடந்த ‘கிலாபத் கிளர்ச்சி’யில் மிகத் தீவிரமாகப் பாடுபட்டார். மதுரையில் நடந்த சுதந்திரப் போராட்டத்தில் அந்நிய நாட்டுப் பொருட்களை விலக்குதல், சுதேசி உடைகளை அணிதல், வெள்ளையரை எதிர்த்தல் போன்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்டதன் காரணமாக 19 நபர்கள் கைதானவர்களில் இவரும் ஒருவர்.

சிறையில் இருந்து வெளியே வந்த பிறகு, திருச்சியிலிருந்து வெளிவந்த ‘சமரசம்’ என்ற பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை 1937-இல் ஏற்று, அதனை வார இதழாகவும், பிறகு தின இதழாகவும் நடத்தி வந்தார். 15.03.1977 மார்ச் 15 அன்று மறைந்தார். கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களின் ‘கிந்தனார்’ நாடகத்துக்கு ஆதரவு, வகுப்புரிமைக்கு ஆதரவு, பெரியார், அண்ணா உள்ளிட்ட தலைவர்கள் மீது வைக்கப்பட்ட விமர்சனங்கள் வகைகளுக்கு எதிராக, தலையங்கம் தீட்டுவது எனச் சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வந்திருக்கிறது இந்த இதழ்.

---

## :ப்ளாஷ்பேக்





அண்ணாமலை இராமநாதன்

### பொதுக்கூட்ட சந்திப்பு!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 4-வது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபோது, சிவகங்கை மாவட்டம், இலங்குடி ஊராட்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வருகை தந்தார். அப்போது இளைஞனாக இருந்த நான், அவரை சந்திக்கவேண்டும் என்ற நீண்ட நாள் ஆசையை சிவகங்கைக்குச் சென்று நிறைவேற்றிக் கொண்டேன். அன்றைய கழகப் பொருளாளர் ஆற்காடு வீராசாமி அவர்களும் உடன் இருந்தார். என் வாழ்நாளில் மறக்க முடியா புகைப்படம் இது.

**-அண்ணாமலை இராமநாதன், இலங்குடி ஊராட்சி, சிவகங்கை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### ரயில் பயணத்தில் இடம்!

**1957-ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் கழகம் எதிர்க்கட்சியாகப் பொறுப் பேற்றதும், பேரறிஞர் அண்ணாவின் உரை, வரலாற்றில் இடம் பெற்ற உரையாக இருந்தது. “நாங்கள் எப்படியோ தட்டுத் தடுமாறி சட்டசபை என்கிற ரயிலில் ஏறிவிட்டோம். அந்த வண்டியில் ஏற்கெனவே காலையும், கையையும் நீட்டிப் படுத்து ஆதிக்கம் செலுத்து கிறவர்களிடம், ‘‘எழுந்துகொண்டு எங்களுக்கு இடம் தாருங்கள்’’ என்று கேட்பதற்கு முன்னால், தாங்களே கையையும், காலையும் மடக்கிக் கொண்டு இவர்களும் பிரயாணத் துக்குத் தகுதி படைத்தவர்கள்தான் என்று கூறி, எங்களுக்கு இடம் கிடைக்கச் செய்ய வேண்டுகிறேன்’’ என அன்றைய நிலைமையை விளக்கி அரசியல் பாடம் எடுத்தார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 313




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131